[முற்பகல் 9—10]

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, இந்த திருக்குறள் ஆராய்ச்சிக்காக சிதம்பரத்திலுள்ள அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டது. அதில் எத்தனை நூல்கள் இதுவரை வெளியிட்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே. 1968-லே உருவாக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் திருக்குறல் ஆராய்ச்சிப் பிரிவுகள் எப்படி நடைபெறுகின்றன என்பதைப் பற்றி இதுவரை மக்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கிறது என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலிருந்து தெரிகிறது. இருந்தாலும் சொல்லுகிறேன். சென்னை பல்கலைக்கழகம் 6 நூல்களை வெளியிட்டிருக்கிறது. அண்ணாமலை பல்கலைக் கழகம் 4 நூல்களை வெளியிட்டிருக்கின்றது. மதுரை பல்கலைக்கழகம் 6 நூல்களை வெளியிட்டிருக்கின்றது.

*553 வினா—திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை வள்ளுவர் கோட்டத்தில் கால்கோள் விழா செய்த சாசனக்கல் பொருத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைப் பொருத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

(ஆ) தக்க இடத்தில் பதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தக்க இடத்திலே பதிக்கப்படும் என்று சொன்னார்கள். நன்றி. அப்போது கால் கோள் விழா செய்யப்பட்ட கல் ஜாக்கிரதையாக உள்ளதா ? பழைய கவர்னர் ஆட்சியின் போது அது அகற்றப்பட்டதாக சொல்லப்படுகிறதே, அதைப்பற்றியும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, கால்கோள் விழா நடத்தியதைக் குறிக்கும் அந்தச் சாசனக்கல் இருந்த இடத்திலே சுற்றுச்சுவர் எழுப்புகின்றபோது, அஸ்திவாரம் போடப்பட்ட போது, அந்தக் கல் பத்திரமாக எடுத்து வைக்கப் பட்டிருக்கிறது என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே, அதைப் பொருத்துவதிலே சங்கடமில்லை.